பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**15 03 2026** **6 45**

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** பிரதமர் திரு. நரேந்திர மோடி பட்ஜெட் அறிவிப்புகள் தொடர்பான “மை பாரத்” இணையதள போட்டியில் வெற்றி பெற்ற இளையோருடன் இன்று கலந்துரையாடுகிறார்.

**2.** நாட்டில் அடுத்த **20** ஆண்டுகளுக்குள் விமான நிலையங்களின் எண்ணிக்கையை **350**ஆக அதிகரிப்பதை இலக்காகக் கொண்டு மத்திய அரசு செயல்பட்டு வருவதாக சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

**3.** மத்திய அரசு கடந்த **12** ஆண்டுகளில் தமிழகத்தின் வளர்ச்சிக்காக **13** லட்சம் கோடி ரூபாயை வழங்கியுள்ளதாக தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

**4.** தமிழகத்தில் மத்திய அரசால் உள்கட்டமைப்பு வசதிகள் பெரிய அளவில் மேம்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மெக்வால் கூறியுள்ளார்.

**5.** **19** வயதுக்குட்பட்டோருக்கான ஃப்யூச்சர்ஸ் கோப்பை உலக குத்துச் சண்டை போட்டியில் இந்தியாவின் 4 வீரர்கள் இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி பட்ஜெட் அறிவிப்புகள் தொடர்பான "மை பாரத்" இணையதள போட்டியில் வெற்றி பெற்ற இளையோருடன் இன்று கலந்துரையாடுகிறார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை நோக்கிய பயணத்தில் பட்ஜெட் அறிவிப்புகளை செயல்படுத்துவது குறித்து இளையோரிடம் அவர் ஆலோசனை நடத்த உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பட்ஜெட் தொடர்பாக மத்திய இளையோர் நலத்துறை அமைச்சகம் நடத்திய இணையதளம் வாயிலான போட்டியில் வினாடி-வினா மற்றும் கட்டுரைப் போட்டிகள் இடம்பெற்றன.

வினாடி-வினாவில் 12 லட்சம் பேரும், கட்டுரைப் போட்டிகளில் 47 ஆயிரம் பேரும் பங்கேற்றதாக இளைஞர் நலத்துறை தெரிவித்துள்ளது.

இதில் உத்தரப்பிரதேசம், தமிழ்நாடு மற்றும் மேற்குவங்க மாநிலங்களில் இருந்து அதிக அளவில் இளையோர் பங்கேற்றதாக அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

நாட்டில் அடுத்த 20 ஆண்டுகளுக்குள் விமான நிலையங்களின் எண்ணிக்கையை 350ஆக அதிகரிப்பதை இலக்காகக் கொண்டு மத்திய அரசு செயல்பட்டு வருவதாக சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

Tuticorin என்பதை தூத்துக்குடி விமான நிலையம் என அதிகாரபூர்வமாக பெயர் மாற்றம் செய்யும் நிகழ்ச்சி தூத்துக்குடியில் நேற்று நடைபெற்றது.

இதில் பங்கேற்றுப் பேசிய அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு, கலாச்சார மரபை போற்றுவதுடன், தமிழ் அடையாளத்தை நிலைநிறுத்தும் வகையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு நாட்டின் விமான நிலைய கட்டமைப்புகளை மேம்படுத்த உயர் முன்னுரிமை அளித்து செயல்படுவதாக அவர் கூறினார்.

2014ஆம் ஆண்டில் நாட்டில் 74 விமான நிலையங்கள் மட்டுமே இருந்ததாகவும், தற்போது அது 166ஆக அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் விமான நிலையங்களில் மேம்பாட்டுப் பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

இப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று தூத்துக்குடி விமான நிலைய ஓடுதளம் 3 கிலோ மீட்டர் வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் பெரிய விமானங்கள் தரையிறங்கவும், புறப்படவும் முடியும் என்றும் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், மத்திய அரசு கடந்த 12 ஆண்டுகளில் தமிழகத்தின் வளர்ச்சிக்காக 13 லட்சம் கோடி ரூபாயை வழங்கியுள்ளதாக கூறினார்.

நம் பாரம்பரியத்தையும், கலாச்சாரத்தையும் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

சாலை, விமானம், ரயில், கப்பல் என அனைத்து போக்குவரத்து துறைகளிலும் தமிழகத்தின் வளர்ச்சியில் அதிக அக்கறையுடன் மத்திய அரசு செயல்படுவதாக டாக்டர் எல். முருகன் கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தின் வளர்ச்சியில் மத்திய அரசு அதிக அக்கறை செலுத்தி வருவதாக மத்திய இணையமைச்சரும் பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவருமான திரு அர்ஜுன் ராம் மெக்வால் கூறியுள்ளார்.

சென்னை அமைந்தகரையில் நடைபெற்ற பிஜேபி மாநில நிர்வாகிகளுக்கான பயிற்சி முகாமில் பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, தமிழகத்தில் உள்கட்டமைப்புகளை பெரிய அளவில் மேம்படுத்தியுள்ளது என்று கூறினார்.

தமிழ் மீதும் தமிழக மக்கள் மீதும் தமிழ் கலாச்சாரத்தின் பிரதமர் திரு நரேந்திர மோடி அதிக பற்றுக்கொண்டு இருப்பதாக அவர் கூறினார்.

மத்திய அரசு எந்த பாரபட்சமும் இன்று அனைத்து மாநிலங்களுக்கும் தேவையான நிதியை ஒதுக்கி வருவதாகவும்

ஆனால் திமுக பொய்யான குற்றச்சாட்டுகளை கூறி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அனைத்து மாநிலங்களிலும் நல்லாட்சியும் நல்ல நிர்வாகமும் அமைய வேண்டும் என்பதே பிஜேபியின் நோக்கம் என்று திரு அர்ஜுன் ராம் மெக்வால் குறிப்பிட்டார்.

<<<<>>>>

முந்தைய அஇஅதிமுக அரசின் திட்டங்களை திமுக அரசு முடக்கியுள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், ‘‘நடந்தாய் வாழி காவேரி’’ திட்டம் மத்திய மாநில அரசுகளின் கூட்டுப் பங்களிப்பில் செயல்படுத்தும் வகையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாக தெரிவித்தார்.

அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட திட்டம் என்ற காரணத்திற்காக இதை திமுக அரசு செயல்படுத்தவில்லை என்று அவர் கூறினார்.

முந்தைய ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் அதிக அளவில் மருத்துவம், பொறியியல், வேளாண் மற்றும் சட்டக் கல்லூரிகள் தொடங்கப்பட்டதாகவும் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

<<<<>>>>

தேர்தல் வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் போதைப்பொருள் புழக்கம் அதிகரித்துள்ளதாக கூறினார்.

சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாகவும், பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுவதாகவும் அவர் தெரிவித்தார்.

காவல்துறைத் தலைவரை கூட நியமிக்காமல் மாநில அரசு மெத்தனமாக செயல்படுவதாக அவர் கூறினார்.

மாநிலத்தில் அனைத்து துறைகளிலும் முறைகேடுகள் அதிகரித்துள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி 200க்கும் அதிகமான இடங்களில் வெற்றி பெறும் என்று திரு. நயினார் நாகேந்திரன் நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதில் மாணவர்கள் மற்றும் இளையோரின் பங்கு முக்கியமானது என்று தமிழக ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கூறியுள்ளார்.

சென்னை ஐ.ஐ.டி.யில் இரண்டு நாட்கள் நடைபெறும் தொழில்நுட்பக் கண்காட்சியை நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

சமூகத்திற்கு பயன்படக் கூடிய புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்குவதில் மாணவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

நாட்டின் முன்னேற்றத்திற்கு அனைவரும் தங்களால் இயன்ற பங்களிப்பை வழங்க வேண்டும் என்றும் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கூறினார்.

<<<<>>>>

செய்தியாளர்கள் செய்தியை துல்லியமாகவும், தெளிவாகவும் வழங்க வேண்டும் என்று பத்திரிகை தகவல் அலுவலகத்தின் தென் மண்டல தலைமை இயக்குநர் திரு. பழனிச்சாமி வலியுறுத்தியுள்ளார்.

சென்னை பத்திரிகை தகவல் அலுவலகத்தின் சார்பில் தென்காசியில் நடைபெற்ற ஊடகவியலாளர்களுக்கான பயிற்சி

முகாமில் பேசிய அவர், செய்திகளின் உண்மைத் தன்மையை அறிந்து அதை மக்களுக்கு கொண்டு செல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

**(Voice Byte - Palanisamy - 46 Sec)**

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

வியட்நாம் நாடாளுமன்றத்துக்கான பொதுத்தேர்தல் இன்று நடைபெறுகிறது.

-------------

காங்கோவில் அடுத்த அதிபரைத் தேர்வு செய்வதற்கான தேர்தல் இன்று நடைபெறுகிறது.

-------------

குஜராத்தின் ஜூனாகத் மற்றும் ராஜ்கோட்டில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா இன்று தொடங்கி வைக்கிறார்.

-------------

மத்திய விளையாட்டு அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஞாயிற்றுக்கிழமைகளில் மிதிவண்டி ஓட்டும் நிகழ்வு நாடு முழுவதும் 65வது வாரமாக இன்று நடைபெறுகிறது.

-------------

மேற்கு ஆப்பிரிக்க நாடான மாலியில் தீவிரவாதிகளால் கடந்த மாதம் கடத்தப்பட்ட தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த இருவர் மத்திய அரசின் முயற்சிகள் காரணமாக பத்திரமாக மீட்கப்பட்டு ஊர் திரும்பியுள்ளனர்.

-------------

புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் புதிய வசதிகளை மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்.

-------------

சென்னை உயர்நீதிமன்ற உத்தரவை அடுத்து உதகமண்டலம் பைக்காரா படகு இல்லத்தில் பெட்ரோல், டீசல் மூலம் இயக்கப்பட்டு வந்த படகுகள் நிறுத்தப்பட்டுள்ளன.

-------------

திருவள்ளூர் மாவட்டம் மீஞ்சூரில் புதிதாகக் கட்டப்பட்ட சமுதாயக் கூடத்தை மாநில அமைச்சர் திரு. நாசர் திறந்து வைத்தார்.

-------------

சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி ஈரோடு மற்றும் நாகையில் காவல்துறையினரும், மத்திய பாதுகாப்புப் படையினரும் இணைந்து நடத்திய கொடி அணிவகுப்பு நேற்று நடைபெற்றது.

-------------

சென்னை திரு.வி.க. நகர் மண்டலத்தில் பல்நோக்கு மையக் கட்டிடத்தில் புதிய நியாயவிலைக் கடையை மாநில அமைச்சர் திரு. சேகர் பாபு திறந்து வைத்தார்.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

19 வயதுக்குட்பட்டோருக்கான ஃப்யூச்சர்ஸ் கோப்பை உலக குத்துச் சண்டை போட்டியில் இந்தியாவின் 4 வீரர்கள் இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

பாங்காக்கில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியாவின் Ambekar ஆடவர் 50 கிலோ எடைப் பிரிவிலும், சந்திரிகா குமாரி மகளிர் 51 கிலோ எடைப் பிரிவிலும், Gunjan 48 கிலோ எடைப் பிரிவிலும், Joysree Devi 54 கிலோ எடைப் பிரிவிலும் இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

---------------

உலகக் கோப்பை மகளிர் ஹாக்கி தகுதிச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது.

ஹைதராபாதில் நேற்று நடைபெற்ற போட்டியில் அந்த அணி 2-0 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வென்றது.

**<<<<The End>>>>**